

# ஸ்ரீ சேஷ ஒளி

## திருவருட்சுடர்



நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா

ஒளி - 9 | காலாண்டிதழ் ஜனவரி - மார்ச் 2015 | கதிர் - 1


# மனசாட்சி ஒரு மந்திரக்கோல்

மந்திரம், தந்திரம், எந்திரம் மூன்றும் சேர்ந்ததுதான் மனித வாழ்க்கை. கணவன் மனைவியை திட்டினால், மனைவி கணவனை அடித்தால், குழந்தைகள் சரியாக படிக்கவில்லை யென்றால், தாய், தந்தையர் சொற்களை கேட்க வில்லையென்றால், ஆசிரியர், பேராசிரியர் நமது குறைகளை எடுத்து சொன்னால், தொழிலாளி, முதலாளியை எதிர்த்து நின்றால், குழந்தையே பிறக்கவில்லையென்றால், கஷ்டப்பட்டு உழைத்த பணம் திருடு போய்விட்டது என்றால், எதிர்பாராத விபத்தில் இறப்பு ஏற்பட்டுவிட்டது என்றால், நினைத்தது நடக்கவில்லையென்றால் மனதே சரியில்லை என்று நாம் சொல்கிறோம். இந்த நிம்மதி இல்லையென்று சொல்வது மனதா? அல்லது மனசாட்சியா? மனது எங்கே



இருக்கிறது, கையிலா? காலிலா? இதயத்திலா? முகத்திலா? அல்லது நம் உடலில் வேறு பகுதியிலா என்பதே கேள்விக்குறி.

பஞ்சமாபாதகங்கள் (பாவங்கள்) என்று சொல்லக்கூடிய கொலை, கற்பழிப்பு, திருட்டு, தங்கத்தை திருடுதல், குருவிற்கு துரோகம் செய்தல் போன்ற விஷயங்களில் ஒருவர் ஈடுபடும் பொழுது குற்றங்களை செய்தவனைப் பார்த்து உனக்கு மனசாட்சி இருக்கிறதா? என்று கேட்கிறோம். அதே நேரத்திலே இப்படி செய் வதற்கு எப்படி மனது வந்தது என்றும் கேட்கி றோம். ஆகவே மனதும், மனசாட்சியும் இணைந்து செயல்படும்பொழுது நடைமுறை இயக்கம் மனித வாழ்க்கையில் இருக்கிறது. நல்லதை செய்வதும், தீயதை செய்வதும், அதன் விளைவுகளாக பிரதிபலிக்கின்றன. ஒழுக்கத் துடனும், நேர்மையுடனும், நியாயத்துடனும், தர்மத்தை அனுசரித்து எப்படி செயல்படுவது என்பது புரியாத புதிராக இருக்கிறது. மனதிற்கும், மனசாட்சிக்கும் நடைபெறும் போராட்டத்தில் சஞ்சல புத்தி, சபல புத்தி, மன அழுத்தம் போன்ற வைகள் தோன்றுகின்றன. எப்படி கையாள்வது? என்று தெரியவில்லை. விளைவு நோய்வாய் படுகிறோம். விடையும் கிடைக்கவில்லை, விடுதலையும் கிடைக்கவில்லை. இந்த நிலையில் தான் நொடிந்து, நொந்துபோன மனதிற்கு வழிகாட்டுதல், உதவி தேவைப் படுகிறது. மந்திரத்தின் மூலமாகவோ, தந்திரத்தின் மூலமாகவோ, அல்லது எந்திரத்தின் மூலமாகவோ கிடைக்கலாம். எதை எப்பொழுது, எங்கு எப்படி பயன்படுத்துவது என்பதை உணர்த்த இறைசக்தி கொண்ட ஞானநிலை யடைந்த ஒரு ஸத்குருவின் வழிகாட்டுதல் தேவைப்படுகிறது.

குருவுக்கும், சீடருக்கும் உண்டான உறவு புனிதமானது, பவித்ரமானது, ஆத்மார்த்தமானது. வியாபார நோக்கம், நிர்பந்தம், கட்டாயம், எதுவும் அங்கே இருக்கக்கூடாது. இந்த இடத்தில்தான் மனசாட்சியின் பங்கு மகத்தானது. எப்படியிருந்த நம்மை ஒரு குரு வழிகாட்டி பண்படுத்தி நல்லது கெட்டதை உணர்த்தி **'வையகத்தில் வாழ் வாங்கு வாழ'** வழிவகை செய்தார் என்பதை மனசாட்சி உள்ள ஒவ்வொருவரும் உணர்ந்து பார்க்க வேண்டும். மீண்டும் மீண்டும் சிந்தித்து பார்க்க வேண்டும். மனசாட்சியின் அடித்தளத்தில் தோண்டி ஆராய்ந்து பார்க்க வேண்டும். நல்ல சீடனாக, மாணாக்கனாக ஸத்குருவின் ஆணைகளை அப்படியே அமல்படுத்தும் செயல்வீரர்களாக உண்மையான சீடர்கள் இருக்க வேண்டும். அப்படியிருந்தால் ஸத்குருவின் உள்ளத்தில் பூரிப்பும், எல்லை யில்லா மகிழ்ச்சியும் ஏற்பட்டு கோடி தோஷங்கள் நிவர்த்தியாகும். பூர்வ வினை, தீய பலன்கள் களையப்படும். வாழ்க்கை புனிதப்படும். மனசாட்சியே இறைசக்தியாக மாறி இதயத்தினுள் புகுந்து ஆத்ம தரிசனம் கிடைத்து முக்தி நிலைக்கு வழிவகுக்கப் படும். ''அறவாழி அந்தணன் தாள் சேர்ந்தார்க்கு'' என்பது போல் எல்லாம்வல்ல எம்பெருமான் திருவடி தரிசனம் கிடைக்கும். இதற்கெல்லாம் பகவத் கீதையில் கூறியது போல் கேள்விகள் கேட்காமல், சஞ்சல படாமல், ஸத்குருவின் பாதங்களில், சரண் அடைவதுதான் சாலச்சிறந்தது.

அப்படிப்பட்ட அரிய பெரிய வாய்ப்பு ஸத்குரு முக்தியடைந்த, நிர்விகல்ப சமாதி நிலையடைந்த நாளான ஜனவரி 12, 13, 14 அன்று நமக்கு கிடைக்க காத்துக் கொண்டிருக்கிறது. ஸத்குருவே மனசாட்சியாக மந்திரக் கோலாக மாறி சகலவித ஐஸ்வர்யங்களையும் அளிப்பார் என்பதில் ஐயமில்லை. வாருங்கள் சரண் அடைவோம். சஞ்சலங்களைத் தீர்ப்போம்.

அனைவருக்கும் ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அருளாசிகள்!

- குருஜி சர்மா

**2015, ஜனவரி 12, 13, 14 மகான் ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி சுவாமிகளின் மகா ஆராதனை விழா நடைபெறவுள்ளது. அனைவரும் கலந்துகொண்டு மகானின் அருளைப் பெறுமாறு கேட்டுக் கொள் கிறோம்.**




**ஸ்ரீ சேஷஒளியில் சந்தாதாரராகி ஸத்குருவின் திருவருள் பெறுங்கள்**

சந்தா ரூ. 101/-

# பரவசம் தந்த அனுபவங்கள்

*''கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்*
*ஸ்ரீசேஷாத்ரி குரும்வந்தே ப்ரம்மேபூதம் தபோநிதம்''*

பெருமதிப்பிற்குரிய சேஷ பக்தர்களே!

வணக்கம். கிரகப் பெயர்ச்சிகளால் மக்களுக்கு ஏற்படும் அயர்ச்சிகளையும், தளர்ச்சிகளையும் நீக்கி மகிழ்ச்சியை அளிக்கக்கூடிய மாபெரும் பரிகார ஸ்தலம் நம் பதிணெண் சித்தர் சக்தி பீடம். நவக்கிரஹ நாயகர்களாக ஒரு நவக்கிரஹத்திற்கு இரண்டு சித்தர்கள் வீதம் ஒன்பது நவக்கிரஹங்களையும் 18 சித்தர்கள் பிரதிபலித்து அருளாட்சி செய்து கொண்டிருக்கிறார்கள். யாருக்கு எந்த கிரஹத்தினால் பிரச்சனைகள் இருந்தாலும் அவர்கள் நமது பதிணெண்சித்தர் சக்தி பீடத்திற்கு குருஜி கே.வி.எல்.என். சர்மா அவர்களின் வழிகாட்டுதலின் படி வந்து பரிகார பூஜை செய்து மனமுருகி வேண்டினால் வந்த வினைகள், வரும் வினைகள்யாவும் சூரியனைக் கண்ட பனிபோல விலகி ஓடி வாழ்வில் வசந்தம் மலரும். தெய்வங்களிடம் நமக்காக வேண்டி பேரானந்த பேரின்பத்தை அள்ளித் தருவர்கள் சித்தர்கள்.

சித்தர்களின் வாக்குக்கு தெய்வங்கள் கட்டுப்படும் என்பது ஆன்றோர் வாக்கு. இங்கே ஒரு சித்தர் அல்ல பதிணெண் சித்தர்கள் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளுடன் சேர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறார்கள். ''அள்ள அள்ள வற்றாதது மணற்கேணி'' அருள அருள குறையாதது மாடம்பாக்கம் பதிணெண் சித்தர் சக்திபீடம்!

உலகெங்கும் உள்ள சேஷ பக்தர்களே, பொதுமக்களே விரைந்து வாருங்கள். உங்களுக்கு எந்த பிரச்சனை வந்தாலும், சரி! அதை பதிணெண் சித்தர்களிடமும் சேஷாத்ரி ஸ்வாமிகளிடமும் கூறி மனமுருகி வேண்டுங்கள்.

உங்கள் வாழ்வில்
ஆனந்தம் அலைமோதும்!
ஆகாயம் தொடும் தூரம்!
கனவெல்லாம் கைகூடும்!
கரம் பற்றி கரை சேர்க்கும்!

மாடம்பாக்கத்தில் நம் பதிணெண் சித்தர் சக்தி பீடம் தோன்றிய பிறகு சித்தர்களைப் பற்றிய ஒரு மிகப் பெரிய விழிப்புணர்வு மக்களிடையே ஏற்பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

தெய்வங்களுக்காக தெய்வங்களாலும் சித்தர்களாலும் எழுப்பப்பட்டுள்ள இந்தத் திருத்தலம், பரிகாரங்களுக்கு உருவான மாபெரும் அருட்தலம்.

ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் சூட்சும ஆணைப்படி குருஜி சர்மா அவர்கள் மக்களின் பிரச்சனைகளுக்கு பரிகாரம் கூற அந்த பரிகாரம் மூலமாக ஆயிரக்கணக்கான பக்தர்கள் இந்த பதிணெண் சித்தர் சக்தி பீடத்திற்கு வந்து வழிபட்டு கைமேல் பலன் பெற்றுச் செல்வது வரலாற்று உண்மை. அப்படிப்பட்ட இத்திருத்தலத்திற்கு, எம்மதமும் சம்மதம் என்ற தாரக மந்திரத்தை உபதேசிக்கும் இந்த சக்தி பீடத்திற்கு கம்ப்யூட்டர் இஞ்சினியர்களே, பொறியியல் வல்லுனர்கள், அலுவலக நிர்வாகிகளே, அன்றாட உழைப்பாளிகளே!

திரைத்துறைக் கலைஞர்களே! தெளிவார்ந்த அறிஞர்களே பாட்டாளிகளே! மண்ணின் மைந்தர்களே! வாருங்கள்! வழிபடுங்கள்! உங்களால் இயன்ற உதவியைச் செய்திடுங்கள்!

எடுத்தாலும் தீராதது கடல்!
கொடுத்தாலும் குறையாதது அருள்!
தடுத்தாலும் நிற்காதது காற்று!
மறந்தாலும் மறையாதது கூற்று!
அசைத்தாலும் அசையாதது மலை!
அழித்தாலும் அழியாதது நிழல்!
எடுத்தாலும் தீராமல், கொடுத்தாலும் குறையாமல்,
தடுத்தாலும் நிற்காமல்,
மறந்தாலும் மறையாமல்
அசைத்தாலும் அசையாமல்
அழித்தாலும் அழியாமல்

கால யுகங்களை கடந்து நிற்பது நமது பதிணெண் சித்தர் சக்தி பீடம் என்று கூறி விடை பெறுகிறேன்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திக்கிறேன்

மருதபரணி

## மகான் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின்
## ஜெயந்தி விழா 8-2-2015

## சக்தி பீடத்தில்
### முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| **ஜனவரி** | |
| 1 | வைகுண்ட ஏகாதசி |
| 4 | பௌர்ணமி |
| 12 | ஹஸ்தம் |
| 12, 13, 14 | மகான் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் ஆராதனை விழா |
| 16 | மாட்டுப்பொங்கல் |
| 20 | அமாவாசை |
| **பிப்ரவரி** | |
| 3 | பௌர்ணமி, தைப்பூசம் |
| 8 | ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் ஜெயந்தி விழா |
| 8 | ஹஸ்தம் |
| 17 | மகா சிவராத்திரி |
| 18 | அமாவாசை |
| **மார்ச்** | |
| 5 | பௌணமி |
| 7 | ஹஸ்தம் |
| 20 | அமாவாசை |
| 28 | ஸ்ரீ ராம நவமி |

18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்
தாம்பரம் வேளச்சேரி வழியாக
ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே
3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனுபுரீஸ்வரர்
சிவன் கோயிலுக்கு அருகில்

**ஸ்ரீசக்ர மஹாமேரு**
**ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள்**
**18 சித்தர்கள் சக்திபீட**
**பிருந்தாவனம்**
**அமைந்துள்ளது.**

**முகவரி என். 1, சன்னதி தெரு,**
**மாடம்பாக்கம், சென்னை - 600 126.**
**போன் : 044-22281408,**
**22280407, 29710972**

**பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K**
**தி.நகரிலிருந்து 5A Cut Service**
**இறங்குமிடம் : சிவன் கோயில்**

## சித்தர் சக்திபீடத்தில் விழாக்கள்



நமது சக்திபீடத்தில் சித்தர் பாலாலயத்தில் சிறிய விழாக்கள் (அறுபதாம் கல்யாணம், பூணூல், சீமந்தம், வளைகாப்பு, காது குத்தல்) நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை அறநிலையத்தினர் செய்துள்ளனர்.

ஏழை எளியவர்களுக்கு உரிய சலுகைக் கட்டணத்தைச் செலுத்தி பயனடையுங்கள். எங்கு நடத்துவது, எப்படி செய்வது என்று குழப்பம் அடைய வேண்டாம்.

விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 94440 26989
(செயலாளர் அறக்கட்டளை)

# ராசி பலன்கள்

# ஜனவரி - மார்ச் 2015

நினைத்தது நிறைவேறட்டும் நல்லதே நடக்கட்டும்
அனைவருக்கும் ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் ஆசிகள்

## மேஷம்

(அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம்)



### ஜனவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்சமடைந்துள்ளார். அஷ்டமத்து சனியின் பாதிப்பு தெரிகிறது. சில அன்பர்களுக்கு வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. வாக்கு வாதங்களில் ஈடுபட வேண்டாம். அமைதி காப்பது நல்லது. பிரயாணத்தின் போது கவனம் தேவை. பணியாளர்களுக்கு மாத இறுதியில் நல்ல தகவல் வரும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பெண்களுக்கு உடல் நிலை பாதிக்கப்படலாம் எச்சரிக்கை. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். அரசியல்வாதிகளுக்கு சொத்துச் சேர்க்கை ஏற்படும். விவசாயிகளுக்கு நில அபிவிருத்தி ஏற்படும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 9,3, நிறம் : பவழம், மஞ்சள், கிழமை : வியாழன், அனுகூல திசை: தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 15 ஆம் தேதி முதல் 17 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டமத்து சனியின் பாதிப்பு உண்டு. எதிலும் எச்சரிக்கை, எங்கும் எச்சரிக்கை என்ற நிலை உள்ளது. அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். பிரயாணத்தின்போது கவனம் தேவை. பணப் புழக்கம் சரளமாக இருக்கும். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு புதிய திருப்புமுனை ஏற்படும். பெண்களுக்கு கருப்பைக் கோளாறுகள் ஏற்பட இடமுண்டு. மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் பெண்களால் பழி வாங்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் ஓரளவு நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், அனுகூல திசை: வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கழமை, சந்திராஷ்டம தினங்கள் : 12 ஆம் தேதி முதல் 14 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டம சனியின் பாதிப்பு உண்டு. புதிய முயற்சிகளை தள்ளிப் போடுவது நல்லது. பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். பணவரவு நல்ல முறையில் இருக்கும். திடீர் திருமணங்கள் நடைபெறும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் மாத பிற்பகுதியில் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு கணவனுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டு அகலும். மாணவர்கள் நன்றாகப் படிப்பார்கள். கலைஞர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஆதாயம் தரும். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் அரசியல்வாதிகள் ஈடுபட வேண்டாம். விவசாயிகளுக்கு மகிழ்ச்சி ஏற்படும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடைபெறும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், அனுகூல திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 11 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## ரிஷபம்



(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)

### ஜனவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கியம் அடைந்துள்ளார். குருபகவான் மறைவிடத்திலும் கண்டகச் சனியின் பாதிப்பும் தெரிகிறது. கணவன், மனைவி விட்டுக் கொடுத்து பழக வேண்டும். திருமணத் தடை ஓரளவு நீங்கும். காதல் முயற்சிகள் மெதுவாக பலன் கொடுக்கும். பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்கவேண்டாம். சில அன்பர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர்களின் புதிய முயற்சி பலன் தரும். கலைத்துறையில் சேர்ந்தவர்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அரசியல்வாதிகளுக்கு தந்தை வழி சொத்தால் ஆபத்து உண்டு. எண்ணை வித்துக்களின் மூலம் விவசாயிகள் ஆதாயம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் சுமாரான பலன்களே ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, அனுகூல திசை: தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 17 ஆம் தேதி முதல் 19 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கண்டகச் சனியின் பாதிப்பு உண்டு. பணமுடக்கம், கடன் தொல்லைகள் கூடும். நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். மின்பொருள் வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு புதிய பொருள் சேர்க்கை ஏற்படும். சில மாணவர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். கலைஞர்கள் சாதனை படைப்பாளர்கள், அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்கும். விவசாயிகளுக்கு அளவோடு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : வடக்கு, அனுகூல திசை: புதன், வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : புதன்கி, சந்திராஷ்டம தினங்கள் : 14 ஆம் தேதி முதல் 16 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*


### மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் உச்சமடைந்துள்ளார். ராஜ யோகம் ஏற்பட்டுள்ளது. பணியாளர்களுக்கு வெளிநாட்டு பிரயாணம் கைகூடும். பொருளாதாரத்தில் எச்சரிக்கை தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் நிதானத்தை கடைபிடிக்கவேண்டும். பெண்களுக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சி மாணவர்களுக்கு வெற்றி தரும். கலைஞர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு சுற்றுலா செல்லும் யோகம் உண்டு. விவசாயிகளுக்கு விளைச்சல் கூடும். பொதுவாக இந்த மாத முற்பகுதியில் நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை : வெள்ளி, அனுகூல திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : வெள்ளி, சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி, சந்திராஷ்டம தினங்கள் : 13 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மிதுனம்

(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)



### ஜனவரி

மாத ஆரம்பத்தில் உடல் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார், கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். திருமணத் தடை அகலும். காதல் கைகூடும். தொழிலதிபர்கள், வியாபாரிகள் புதிய முதலீடு செய்வார்கள். பெண்களுக்கு ஆடை ஆபரண சேர்க்கை ஏற்படும். மாணவர் கள் கல்வியில் முன்னேற்றம் அடைந்து மகிழ்ச்சி அடைவார்கள். வெளிநாட்டு பிரயாணம் கலைஞர்களுக்கு நல்ல ஆதாயம் தனம் அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத பணம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3 நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், அனுகூல திசை: வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : துர்க்கையம்மன், கிழமை : செவ்வாய், சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிறு, சந்திராஷ்டம தினங்கள் : 19 ஆம் தேதி முதல் 21 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். குருவின் உச்ச பார்வை கிடைக்கிறது. சுபகாரியங்கள் நடக்கும். காதல் திருமணம் கைகூடும், புதிய முதலீடுகள் வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. பணியாளர்களுக்கு எதிர்பாராத உதவி கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு இல்லத்தில் குதூகலம் ஏற்படும். வெளிநாட்டில் படிக்கும் மாணவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கும், கலைஞர்களுக்கு புதிய நட்பின் மூலம் ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு சூழ்ச்சி தெரிகிறது எச்சரிக்கை. விவசாயிகளுக்கு விளைச்சல் கூடும். பொதுவாக இந்த மாதம் நல்ல பலன் களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3 நிறம் : மஞ்சன், கிழமை : வியாழன், அனுகூல திசை: வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : வெள்ளி, சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி, சந்திராஷ்டம தினங்கள் : 16 ஆம் தேதி முதல் 18 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். குருபலம் கூடி உள்ளது. காதல் திருமணம் கை கூடும். பணியாளர்களுக்கு பணவரவு திருப்திகரமாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். மாணவர்களுக்கு பாராட்டுக்கள் குவியும். கலைஞர்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். அரசியல்வாதிகள் சகோதரர்களால் பாதிக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சன், கிழமை வியாழன், அனுகூல திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : முருகன், கிழமை : செவ்வாய், சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னி மலை சித்தர், கிழமை : வெள்ளி, சந்திராஷ்டம தினங்கள் : 15 ஆம் தேதி முதல் 17 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## கடகம்

(பூனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)



### ஜனவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். அர்தாஷ்டம சனி விலகிவிட்டது. மனதில் நிம்மதி ஏற்படும். வீண் கவலை நீங்கும், திருமணம் கை கூடும். பணியாளர்களுக்கு நல்ல செய்தி வரும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். மாணவர்களுக்கு கல்வித் தடை நீங்கும். கலைஞர்கள் சின்னத் திரை மூலம் ஆதாயம் அடைவார்கள். இசைக் கலைஞர்களுக்கு சிறப்பு லாபங்கள் ஏற்படும். அரசியல்வாதிகள் குடும்பத்தில் விட்டுக் கொடுத்து பழக வேண்டும். விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், அனுகூல திசை: தென் மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை : செவ்வாய், சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி, சந்திராஷ்டம தினங்கள் : 21 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். தொழிலில் கவனத்துடன் பணியாற்ற வேண்டும். உடல் நலத்தில் அக்கறை தேவை. காதல் திருமணம் தாமதப்படும். பணியாளர்களுக்கு பொருளாதாரத்தில் கவனம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்க்க வேண்டும். பெண்களுக்கு மாதவிடாய், கருப்பை கோளாறுகள் ஏற்படலாம். மாணவர்கள் ஓரளவு நன்றாக படிப்பார்கள். கலைஞர்களுக்கு சுபச் செலவுகள் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு உடன்பிறப்புகளால் சங்கடமான சூழ்நிலை ஏற்படும். விவசாயிகளுக்கு கடன் கூடும். எச்சரிக்கை. பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், அனுகூல திசை: வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை : வியாழன், சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன், சந்திராஷ்டம தினங்கள் : 18 ஆம் தேதி முதல் 20 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

### மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் விரயம் அடைந்துள்ளார். அர்தாஷ்டம சனி விலகிவிட்டது. நீண்ட நாட்கள் பிரச்சனைக்கு விடை கிடைக்கும். பணியாளர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் மாதப் பிற்பகுதியில் லாபம் அடைவார்கள். பெண்களுக்கு தந்தை வழி சொத்து ஆதாயம் கொடுக்கும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு எதிர்பாராத பணவரவு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு வெளிநாட்டு பிரயாணம் ஏற்படும். விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் 65% நல்ல பலன்களே கிடைக்கும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், அனுகூல திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை : வியாழன், சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர்,*

**குருஜி கே.வி.எல்.என். சர்மா**

அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன், சந்திராஷ்டம தினங்கள் : 17 ஆம் தேதி முதல் 19 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

## சிம்மம்

(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)



### ஜனவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பேச்சில் இனிமை தேவை. வீண் வாக்கு வாதங்களில் ஈடுபட வேண்டாம். அர்தாஷ்டம சனி ஆரம்பித்து உள்ளதால் மனக்கவலைகள் அதிகரிக்கும். வாகன ஓட்டிகள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். இல்லத்தில் சுப காரியங்கள் நடக்கும். பணியாளர்களுக்கு ஓரளவு நல்ல பலன்கள் கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. பெண்களுக்கு உடலில் கருப்பை சுரப்பிகளால் கோளாறு ஏற்படும். அறுவை சிகிச்சை நடக்கலாம். மாணவர்கள் நன்றாக படிப்பார்கள். கலைஞர்களுக்கு எதிரிகளால் தொல்லை உண்டு. அரசியல்வாதிகள் எதிர் கட்சிகளை அரவணைத்து செல்லவேண்டும். விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

**அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், அனுகூல திசை: வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை ஞாயிறு, சித்தர்கள் : மகாபோகர் சித்தர், புலிப்பாணி சித்தர், கிழமை : செவ்வாய், சந்திராஷ்டம தினங்கள் : 24 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 6ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். பேச்சில் கவனம், நிதானம் தேவை. அர்தாஷ்டம சனியின் பாதிப்பு தெரிகிறது. அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். திருமணத் தடை நீங்கும். பணியாளர்களுக்கு இல்லத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். வியாபாரிகள் தொழிலதிபர்கள் தொழிலை அபிவிருத்தி செய்வார்கள். பெண்களுக்கு கணவனால் மனக்கசப்பு ஏற்பட்டு நீங்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய நட்பு ஏற்படும். விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.


**அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், அனுகூல திசை: தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : வியாழன், சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 20 ஆம் தேதி முதல் 22 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**

### மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திரஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அர்தாஷ்டம சனியின் பாதிப்பு உண்டு. காதல் திருமண விஷயத்தில் முடிவு எடுப்பதில் சங்கடம் ஏற்படும். சுபகாரியங்கள் நடக்கும். பணியாளர்களுக்கு புது வீடு வாங்கும் யோகம் தெரிகிறது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு நல்ல லாபம் அடைவார்கள். உடன்பிறப்புகளால் பெண்களுக்கு தொல்லை ஏற்படலாம். மாணவர்களுக்கு படிப்பில் அதிக கவனம் தேவை. சின்னத்திரை கலைஞர்கள் அதிக அளவு ஆதாயம் அடைவார்கள். எதிரிகளின் சூழ்ச்சியில் அரசியல்வாதிகள் மாட்டுவார்கள். விவசாயிகளுக்கு பொருள் சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் 60% நல்ல பலன்களே நடக்கும்.

**அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், அனுகூல திசை : தென்மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 19 ஆம் தேதி முதல் 22 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**

## கன்னி



(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)

### ஜனவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனி விலகிவிட்டது. நினைத்தது நடக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். திருமணத் தடை நீங்கும். காதல் கை கூடும். பணியாளர்கள் பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைத்து மகிழ்ச்சியடைவார்கள். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். குழந்தைகளால் பெண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்கள் நன்றாக படிப்பார்கள். கலைஞர்களுக்கு புதிய முயற்சி வெற்றி தரும். அரசியல்வாதிகளுக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

**அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை செவ்வாய், அனுகூல திசை: தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை வியாழன், சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : வெள்ளி, சந்திராஷ்டம தினங்கள் : 26 ஆம் தேதி முதல் 28 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனி விலகி விட்டது. தொட்டது துலங்கும் நேரம். காதல் திருமணம் கை கூடும். பணியாளர்களுக்கு பதவி சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் பெருத்த லாபம் அடைவார்கள். பெண்களுக்கு மர்ம உறுப்பில் அறுவை சிகிச்சை ஏற்பட இடமுண்டு. மாணவர்களுக்கு வெளிநாட்டில் கல்வி வாய்ப்பு ஏற்படும். கலைஞர்களுக்கு உடன்பிறப்புகளால் பாதிப்பு உண்டு. அரசியல்வாதிகளுக்கு எதிரிகளால் அச்சுறுத்தல் தெரிகிறது. எச்சரிக்கை. விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் 70% நல்ல பலன்களே நடக்கும்.

**அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், அனுகூல திசை: வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை வியாழன், சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : வெள்ளி, சந்திராஷ்டம தினங்கள் : 22 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**

### மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனி விலகி விட்டது. குடும்பத்தில் சுபநிகழ்வுகள் நடக்கும். காதல், திருமணம் கைகூடும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து பழகுதல் நன்மை பயக்கும். மாணவர்கள் நன்றாக படிப்பார்கள். கலைஞர்களுக்கு புது வீடு வாங்கும் யோகம் உண்டு. அரசியல்வாதிகள் குடும்பப் பிரச்சனையில் சிக்குவார்கள் எச்சரிக்கை. விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் 75% நல்ல பலன்களே நடக்கும்.

**அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை வியாழன், அனுகூல திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : வெள்ளி, சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி, சந்திராஷ்டம தினங்கள் : 22 ஆம் தேதி முதல் 24 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**

## துலாம்

(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)



### ஜனவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். கிரஹப்பிரவேசம் செய்யும் யோகம் தெரிகிறது. ஏழரை சனியின் பாதிப்பு இருக்கிறது. பிரயாணத்தின்போது கவனம் தேவை. பணியாளர்கள் பொறுமை காப்பது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். பெண்களுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். அரசியல்வாதிகளுக்கு வாகனம் வாங்கும் யோகம் உண்டு. விவசாயிகளுக்கு கடன் தொல்லை நீங்கும். பொதுவாக இந்த மாதம் ஓரளவு நல்ல பலன்களே ஏற்படும்.

**அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை செவ்வாய், அனுகூல திசை: தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 1 ஆம் தேதி முதல் 3 ஆம் தேதி வரை மற்றும் 28ம் தேதி முதல் 30ம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குடும்ப ஸ்தானத்தில் சனீஸ்வரன் இருக்கிறார். பேச்சில் கவனம் தேவை. சிலர் உங்களை அடுத்து கெடுப்பார்கள். பணியாளர்கள் எச்சரிக்கையுடன் வேலை செய்ய வேண்டும். இடமாற்றம் தெரிகிறது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். பெண்களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். கலைஞர்களுக்கு சொத்துப் பிரச்சனை ஏற்படும். பரிகாரம் தேவை. அரசியல்வாதிகள் ஆதாயம் அடைவார்கள். விவசாயிகளுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.


**அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், அனுகூல திசை: வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 24 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**

### மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்சமடைந்துள்ளார். பொதுவாக எல்லோருக்கும் உடல் நலத்தில் அக்கறை தேவை. மருத்துவச் செலவுகள் ஏற்படலாம். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அரசாங்கத்தால் தொல்லை ஏற்படும். பெண்களுக்கு மருத்துவச் செலவு ஏற்படலாம். மாணவர்கள் நன்றாகப் படிப்பார்கள். குழந்தைகளால் கலைஞர்களுக்கு தொல்லை ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு பதவி பறிபோகும் விவசாயிகளுக்கு தாமத பலன்கள் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் 50% இந்த மாதம் நல்ல பலன்கள் நடக்கும்.

**அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், அனுகூல திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை வியாழன், சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன், சந்திராஷ்டம தினங்கள் : 24 ஆம் தேதி முதல் 26 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**

## விருச்சிகம்



(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை )

### ஜனவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 3ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனி, ஜன்மச் சனியாக மாறிவிட்டார். எதிலும் எங்கும் கவனம் தேவை. விவேகமும், நிதானமும் தேவை. புதிய முயற்சிகள் வேண்டாம். பணியாளர்கள், அமைதி, பொறுமை காப்பது நல்லது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் மஹான்களை தரிசிக்க வேண்டும். பெண்கள் குடும்பத்தில் விட்டுக் கொடுத்து பழக வேண்டும். மாணவர்கள் ஓரளவு நன்றாக படிப்பார்கள். கலைஞர்களுக்கு இளைய சகோதர, சகோதரிகள் மூலம் செலவுகள் ஏற்படலாம் எச்சரிக்கை. அரசியல்வாதிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். விவசாயிகள் செலவுகளை திட்டமிட வேண்டும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

**அதிர்ஷ்ட எண். 3 நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், அனுகூல திசை: வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை வியாழன், சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : வெள்ளி, சந்திராஷ்டம தினங்கள் : 3 ஆம் தேதி முதல் 5 ஆம் தேதி வரை மற்றும் 30ம் தேதி முதல் பிப்ரவரி 2ம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**

### பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனி ஆரம்பித்துள்ளது. மனப்புழுக்கம் ஏற்படும். பிரயாணத்தில் கவனம் தேவை. பணியாளர்களுக்கு சங்கடம் ஏற்பட்டு விலகும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு மஹான்களின் தரிசனம் கிடைக்கும். பெண்களுக்கு முக்கிய நல்ல செய்தி வரும். மாணவர்களுக்கு கல்வியில் தடை இராது. கலைஞர்கள் வெளிநாட்டு பிரயாணத்தில் ஆதாயம் காண்பார்கள். அரசியல்வாதிகளுக்கு சங்கடமான சூழ்நிலை ஏற்படும். விவசாயிகளுக்கு பொருள் சேர்க்கை ஏற்படும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலன்களே நடக்கும்.

**அதிர்ஷ்ட எண். 3 நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், அனுகூல திசை: வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 27 ஆம் தேதி முதல் மார்ச் 1 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**


### மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 5ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. பிரயாணத்தின்போது கவனம் தேவை. பணியாளர்களுக்கு ஆன்மீக பயணம் ஆதாயம் தரும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். குழந்தைகளால் பெண்களுக்கு சங்கடம் ஏற்படும். முன்னேற்றம் மாணவர்களுக்கு கல்வியில் ஏற்படும். கலைஞர்களுக்கு எதிர்பாராத பொருள் வரவு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு நிலத் தகராறு ஏற்படலாம் எச்சரிக்கை. விவசாயிகளுக்கு உடல் நலத்தில் கவனம் தேவை. பொதுவாக இந்த மாதம் 60% நல்ல பலன்களே நடக்கும்.

**அதிர்ஷ்ட எண். 6, நிறம் : சாம்பல், கிழமை வெள்ளி, அனுகூல திசை : தென்கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை : வியாழன், சித்தர்கள் : சட்டைமுனி சித்தர், குதம்பை சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 26 ஆம் தேதி முதல் 28 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.**

## தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )



### ஜனவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்சமடைந்துள்ளார். ஏழரை சனி ஆரம்பித்துள்ளது. குருபார்வை இருப்பதால் பயப்பட வேண்டாம். திருமணத் தடை நீங்கும். புதிய வீடு, மனை வாங்கும் யோகம் தெரிகிறது. பணியாளர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு பொருளாதார அபிவிருத்தி

ஏற்படும். மாணவர்கள் ஓரளவு நன்றாக படிப் பார்கள். அரசியல்வாதிகள் ஆதாயம் அடைவார்கள். விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் உதவி உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல பலன்களே ஏற்படும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை செவ்வாய், அனுகூல திசை: தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை வியாழன், சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 5 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வும்.*

## பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்ச மடைந்துள்ளார். ஏழரை சனியின் பாதிப்பு உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். வீண் கவலைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம். பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் வியாபாரத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு தாயை நினைத்து கவலை கூடும். மாணவர்களுக்கு கல்வியில் தடை இல்லை. கலைஞர்கள் ஓரளவு லாபம் அடை வார்கள். அரசியல்வாதிகளுக்கு வெளிநாட்டு நட்பின்மூலம் ஆதாயம் கிடைக்கும். விவசாயி களுக்கு சுமாரான பலன்கள் நடக்கும். பொது வாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்கள் நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், அனுகூல திசை : தென் மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஐயப்பன், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்திராஷ்டம தினங்கள் : 2 ஆம் தேதி முதல் 4 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்சமடைந்துள்ளார். ஏழரை சனியின் பாதிப்பு உள்ளது. மனதில் வீண் கலக்கம் கவலை ஏற்படும். எல்லாவிதத்திலும் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. பணியாளர்கள் அவசர முடிவுகளை எடுக்கவேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடைவார்கள். பெண்களுக்கு தாய் வழியில் மருத்துவச் செலவு ஏற்படும். மாணவர்கள் அதிக கவனத் துடன் படிக்கவேண்டும். கலைஞர்களுக்கு கடல் பிரயாணம் ஆதாயம் தரும். அரசியல் வாதிகள் நிலத் தகராறில் ஈடுபட வேண்டாம். விவசாயிகளுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், அனுகூல திசை : வடகிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்சநேயர், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : சனிக்கிழமை, சந்தி ராஷ்டம தினங்கள் : 1 ஆம் தேதி முதல் 3 ஆம் தேதி மற்றும் 28ம் தேதி முதல் ஏப்ரல் 31 வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்க வும்.*



# மகரம்

(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)

## ஜனவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். சிலருக்கு புதிய முதலீடு கள் செய்யும் வாய்ப்பு கிடைக்கும். காதல் திருமணம் கை கூடும். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியா பாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத லாபம் கிடைக்கும். பெண்களுக்கு கணவனால் ஆதாயம் உண்டு. மாணவர்களுக்கு அயல் நாட்டு வாய்ப்பு கிடைக்கும். கலைஞர்களுக்கு அயல்நாட்டு தொடர்பினால் ஆதாயம் அடை வார்கள். அரசியல்வாதிகளுக்கு எதிர்பாராத நல்ல திருப்பம் ஏற்படும். விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 9, நிறம் : பவழம், கிழமை செவ்வாய், அனுகூல திசை : தெற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழ மை வெள்ளி, சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிறு, சந் திராஷ்டம தினங்கள் : 8 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப் பதைத் தவிர்க்கவும்.*

## பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். காதல், திருமணம் கை கூடும். பணியாளர் களுக்கு பணப்புழக்கம் சரளமாக இருக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். வீண் பேச்சால் பெண்களுக்கு தொந்தரவு ஏற்படும் எச்சரிக்கை. மாணவர்கள் நன்றாக படிப்பார்கள். கலைஞர்களுக்கு கடல் பிரயாணம் ஆதாயம் கொடுக்கும். அரசியல் வாதிகளுக்கு புதிய சொத்து சேர்க்கை ஏற்படும். விவசாயிகளுக்கு நிலம் வாங்கும் யோகம் உண்டு. பொதுவாக இந்த மாதம் நல்ல மாத மாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை வியாழன், அனுகூல திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : கிரஹலஷ்மி, கிழமை : வெள்ளி, சித்தர்கள் : கருவூரார் சித்தர், கபிலர் சித்தர், கிழமை : வெள்ளி, சந்திராஷ்டம தினங் கள் : 4 ஆம் தேதி முதல் 7 ஆம் தேதி வரை முக்கி யமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். பேச்சில் நிதானம் தேவை. காதல், திருமணம் கை கூடும். பண வரவு அதிகரிக்கும். இல்லத்தில் சுபநிகழ்வுகள் நடைபெறும். பணியாளர்களுக்கு பதவி, உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரி கள், தொழிலதிபர்கள் அதிக லாபம் அடை வார்கள். மாணவர்களுக்கு உயர்கல்வி வாய்ப்பு கிடைக்கும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்பு கள் தேடி வரும். அரசியல்வாதிகளுக்கு சகோ தர, சகோதரிகளால் பிரச்சனை ஏற்படலாம். விவசாயிகளுக்கு கடன் நிவாரணம் கிடைக் கும். இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை வியாழன், அனுகூல திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை வெள்ளி, சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிறு, சந்திராஷ் டம தினங்கள் : 3 ஆம் தேதி முதல் 6 ஆம் தேதி வரை மற்றும் 31ஆம் தேதி முதல் ஏப்ரல் 2ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்ப தைத் தவிர்க்கவும்.*



# கும்பம்

(அவிட்டம் 3,4, பாதம், சதயம் பூரட்டாதி 1,2,3 பாதம்

## ஜனவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணி யாளர்களுக்கு உழைப்பு அதிகமாக இருக்கும். அலைச்சல் உண்டு. வியாபாரிகள், தொழி லதிபர்கள் கடல் வாணிபத்தின் மூலம் ஆதாயம் அடைவார்கள். போக்குவரத்துத் துறையில் முன்னேற்றம் ஏற்படும். பெண்களுக்கு பாலியல் தொந்தரவு ஏற்படும். எச்சரிக்கை. மாணவர்கள் கல்வியில் தடை ஏற்பட்டு முன் னேறுவார்கள். கலைஞர்களுக்கு அரசாங் கத்தின் மூலம் வரித் தொல்லை ஏற்படலாம். எச் சரிக்கை. அரசியல்வாதிகளுக்கு கௌரவம் ஏற் படும். விவசாயிகளுக்கு மானியம் கிடைக்கும்.

*அதிர்ஷ்ட எண். 1, நிறம் : ரோஸ், கிழமை : ஞாயிறு, அனுகூல திசை : கிழக்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட்சிணாமூர்த்தி, கிழமை வியாழன், சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன், சந்தி ராஷ்டம தினங்கள் : 10 ஆம் தேதி முதல் 13 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்ப தைத் தவிர்க்கவும்.*

## பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். உணர்ச்சி வசப்பட வேண்டாம். பணியாளர்களுக்கு அரசாங் கத்தால் தொல்லைகள் ஏற்படலாம். உடல் நலத்தில் கவனம் தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் கடன் கொடுக்க வேண்டாம். பெண்களுக்கு வீண் பேச்சால் தொல்லை ஏற்படும். மாணவர்கள் கவனத்துடன் படிக்க வேண்டும். சின்னத் திரை கலைஞர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகள் அரசாங்கத்தால் தண்டிக்கப்படுவார்கள். விவ சாயிகளுக்கு கடன் தொல்லையிலிருந்து நிவா ரணம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே இருக்கும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், அனுகூல திசை: தென் மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : தட் சிணாமூர்த்தி, கிழமை : வியாழன், சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன், சந்திராஷ்டம தினங்கள் : 7 ஆம் தேதி முதல் 9 ஆம் தேதி வரை முக்கிய மான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 10ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். குருபகவான் 6ம் இடத்தில் இருக்கிறார். பண நெருக்கடி ஏற்பட லாம். பொருளாதார திட்டம் தேவை. சில முடிவு களை தள்ளிப் போடுவது நல்லது. பணி யாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபட வேண் டாம். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு சுமா ரான லாபம் கிடைக்கும். பெண்கள் குடும் பத்தில் வீண் வாக்குவாதங்களை தவிர்க்கவும். மாணவர்களுக்கு வெளிநாட்டு வாய்ப்பு கிடைக்கும். கலைஞர்களுக்கு பாராட்டு, கௌரவம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு புதிய பதவி கிடைக்க வாய்ப்புண்டு. விவசாயி களுக்கு வாகன ஆதாயம் உண்டு. பொதுவாக இந்த மாதம் 60% நல்ல பலன்களே நடக்கும்.

*அதிர்ஷ்ட எண். 2, நிறம் : வெண்மை, கிழமை : திங்கள், அனுகூல திசை : தென் மேற்கு, வழிபட வேண்டிய கடவுள் : ஆஞ்ச நேயர், கிழமை : சனிக்கிழமை, சித்தர்கள் : காகபுஜண்டர் சித்தர், அகப்பேய் சித்தர், கிழமை : வியாழன், சந்திராஷ்டம தினங்கள் : 6 ஆம் தேதி முதல் 8 ஆம் தேதி வரை முக்கிய மான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

# மீனம்

(புரட்டாதி 4ம்பாதம் உத்திரட்டாதி, ரேவதி)



## ஜனவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்ச மடைந்துள்ளார். அஷ்டமத்து சனி விலகி விட்டது. மனதில் புதிய உற்சாகம் ஏற்படும். காதல், திருமணம் கை கூடும். புதிய முயற்சி கள் பணியாளர்களுக்கு வெற்றி கொடுக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு எதிர்பாராத பண வரவு ஏற்படும். மாணவர்களுக்கு மனதிற் கினிய சம்பவம் நடக்கம். கலைஞர்களுக்கு அயல்நாட்டு பிரயாணம் நல்ல லாபம் கிடைக் கும். அரசியல்வாதிகள் அரசாங்கத்தால் கௌர விக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல பலன்களே நடைபெறும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை வியாழன், அனுகூல திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : சக்திபீட கணபதி, கிழமை வியாழன், சித்தர்கள் : பட்டினத்தார் சித்தர், கடுவெளி சித்தர், கிழமை : ஞாயிறு, சந்திராஷ் டம தினங்கள் : 13 ஆம் தேதி முதல் 15 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*

## பிப்ரவரி

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்ச மடைந்துள்ளார். அஷ்டமத்து சனி விலகி விட்டது. பணியாளர்களுக்கு மகிழ்ச்சியான சூழ் நிலை ஏற்படும். பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்களுக்கு எதிர் பாராத லாபம் கிடைக்கும். பெண்களுக்கு சுற்றுலா செல்லும் வாய்ப்பு கிடைக்கும். மாணவர்கள் நன்றாக படிப்பார்கள். புதிய முயற்சி கலைஞர்களுக்கு வெற்றி கொடுக்கும். அரசியல்வாதிகளுக்கு வெளிநாட்டு பிரயா ணம் உண்டு. விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 5, நிறம் : பச்சை, கிழமை : புதன், அனுகூல திசை : வடகிழக்கு, வழி பட வேண்டிய கடவுள் : ராஜகாளியம்மன், கிழமை வெள்ளி, சித்தர்கள் : அழுகணி சித்தர், பாம் பாட்டி சித்தர், கிழமை : ஞாயிறு, ராகுகாலம், சந்திராஷ்டம தினங் கள் : 9 ஆம் தேதி முதல் 12 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க் கவும்.*

## மார்ச்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் உச்சமடைந்துள்ளார். அஷ்டமத்து சனி விலகிவிட்டது. எங்கும், எதிலும், காரிய சித்தி ஏற்படும். சுபநிகழ்வுகள் நடக்கும். உணர்ச்சி வசப்பட்டு பணியாளர்கள் முடிவு எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழிலதி பர்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். பெண் களுக்கு ஆடை, ஆபரண சேர்க்கை ஏற்படும். கலைஞர்களுக்கு புதிய நண்பர்கள் அறி முகம் ஆவார்கள். அரசியல்வாதிகள் கௌர விக்கப்படுவார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

*அதிர்ஷ்ட எண். 3, நிறம் : மஞ்சள், கிழமை : வியாழன், அனுகூல திசை : வடக்கு, வழிபட வேண்டிய கடவுள் : ராஜ காளியம்மன், கிழமை : ஞாயிறு, ராகுக் காலம், சித்தர்கள் : கஞ்சமலை சித்தர், சென்னிமலை சித்தர், கிழமை : வெள்ளி, சந் திராஷ்டம தினங்கள் : 8 ஆம் தேதி முதல் 11 ஆம் தேதி வரை முக்கியமான முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.*


**மும்பை பக்தர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு**

**15-2-2015** அன்று அற்புத சுகமளிக்கும் ஆனந்த ஹோமம் நடைபெறவுள்ளது.

**ஸ்ரீ லக்ஷ்மி குபேர தனகர்ஷண ஹோமம் / ஸ்ரீ காமதேனு பூஜா ஹோமம்**

விபரங்களுக்கு / பங்கேற்க

திருமதி மீரா ரவீந்திரநாத் **99872 73961**

ஸ்ரீ சேஷாத்ரி **98203 16248**

திருமதி லதா நரசிம்மன் **98671 20231**

**ஸ்ரீ சேஷ ஒளி**
**விளம்பர கட்டண விபரம்**

| | | |
|---|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 | (கறுப்பு/ வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 | (கறுப்பு/ வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 | |
| ஒரு பத்தி | ரூ. 250 | |

# செயற்கை கோளுக்கே கோடு போடும் சனிபகவான்



இன்று பல நாடுகள் செயற்கை கோள்களை விண் வெளிக்கு அனுப்பி வருகின்றன. அவற்றில் செல்போன் பயன்பாடு ராணுவ பயன்பாடு உளவு என பல்வேறு காரணங்களுக்காக பயன்படுத்தப்படுகிறது. சில வருடங்களுக்கு முன்பு அமெரிக்கா செயற்கைகோள் ஒன்று பூமியின் குறிப்பிட்ட பகுதியை கடக்கும் போது மட்டும் 3 வினாடிகள் ஸ்தம்பித்து விடுகிறது. 3 வினாடிகளுக்கு பிறகு வழக்கம்போல் வானில் பறக்க ஆரம்பித்து விடுகிறது. எந்தவித பழுதும் அதன் செயற்கை கோளில் அதன் கருவி களில் ஏற்படுவதில்லை.

இந்த சம்பவம் நாசாவிற்கு அதிர்ச்சி கலந்த ஆச்சரியத்தை அளித்தது இது எப்படி சாத்தியம்? என்பதை ஆராய்ந்து கிடைத்த முடிவு நாசாவை மட்டுமல்ல. உலகையே மிரள வைத்தது.

ஆம்! எந்த ஒரு செயற்கை கோளும் பூமியில் இந்தியாவின் தமிழ்நாடு அருகிலுள்ள புதுச்சேரி திருநள்ளாறு ஸ்ரீ தர்ப்பாரண்யேசுவரர் கோவிலுக்கு மேல் நேர் உள்ள வான்பகுதியை கடக்கும் 3 வினாடிகள் மட்டும் ஸ்தம்பித்து விடுகின்றன. அப்படி நிகழ்வதற்கு என்ன காரணம்?

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வினாடியும் கண்ணுக்கு தெரியாத கருநீலக்கதிர்கள் அந்த கோவிலின் மீது விழுந்து கொண்டே இருக்கிறது. இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை நடக்கும் சனிப்பெயர்ச்சியின் போது இந்த கருநீலக்கதிர்களின் அடர்த்தி மிகவும் அதிகமாக இருக்கும் விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் செயற்கை கோள்கள் இந்த கருநீலக்கதிர்கள் பாயும் பகுதிக்குள் நுழையும் போது ஸ்தம்பித்து விடுகின்றன. அதே நேரத்தில் செயற்கை கோள்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படுவதில்லை.

இதில் குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் இந்த கோவில்தான் இந்துக்களால் சனி பகவான் தலம் என்று போற்றப் படுகிறது. இந்த சம்பவத்திற்கு பிறகு நாசாவிலிருந்து பல முறை திருநள்ளாறு வந்து ஆராய்ச்சி செய்து விட்டனர். மனிதனை மீறிய சக்தி உண்டு என்பதை உணர்ந்தனர். அவர்களும் சனி பகவானை கையெடுத்து கும்பிட்டு உணர்ந்தனர். இன்று வரை விண்ணில் செயற்கை கோள்கள் திருநள்ளாறு பகுதியை கடக்கும் போது ஸ்தம்பித்து கொண்டே இருக்கிறது.

இந்த செய்தியை கேட்டு பிரமிக்காதவர்கள் நம்முடைய முன்னோர்களை நினைத்து கட்டாயம் பிரமிக்க வேண்டும். நாம் பல செயற்கை கோள்கள் கொண்டு கண்டறியும் சனிக் கோளின் கதிர்வீச்சு விழும் பகுதியை கண்டுபிடித்து அதற்கென ஒரு கோயிலையும் கட்டி கதிர்வீச்சுகள் அதில் விழும் நாட்களையும் கணக்கிட்டு அதற்கான நாளை சனிபெயர்ச்சி என்று அறிவிக்கும் திறமையை நம்மால் நினைத்துக்கூட பார்க்க முடியாத ஒரு தொலைநோக்கு பார்வை கொண்ட நம் முன்னோர்களை நினைத்து என்னால் பிரமிக்காமல் இருக்க முடியவில்லை.

இதை மிஞ்சும் வகையில் ஒரு விஷயம் கேள்வி பட்டேன்.

நீங்கள் ஏதாவது சிவன் கோவிலுக்கு சென்றால் அங்கே நவக்கிரகங்களை நன்றாக கவனியுங்கள். அந்த சிலைகளின்மேல் கட்டப்பட்டுள்ள துணிகளையும் நன்றாய் உற்று பாருங்கள்.

உங்கள் அறிவியல் அறிவையும் கொஞ்சம் தட்டி விடுங்கள்.

எந்த கோள் எந்த நிறத்தில் இருக்கும் என்பதை நம் முன்னோர்கள் கட்டி வைத்திருக்கும் அந்த துணிகளில் கண்டறியுங்கள். பிரமித்து போவீர்கள்! பெரியோர்களின் அறிவாற்றலை நினைத்து, இந்த அறிவியலின் அதிசயத்தை அனைத்து தலைமுறையும் அறியவேண்டும். அதற்காக அவர்கள் நம்மை பின்பற்ற வைத்ததுதான் கடவுள் மார்க்கம் என்றேதான் எண்ணுகிறேன்.

நமது 18 சித்தர் சக்தி பீடத்தில் 16ந் தேதி டிசம்பர் 2014 நடந்த சனி பெயர்ச்சி ஹோமத்தில் ஒரு நிகழ்வை உங்களிடம் பகிர்ந்து கொள்கிறேன். குருஜி சர்மாஜியின் தலைமையில் நடந்த ஹோமத்தில் வேத விற்பனர்கள் மந்திரம் ஜபித்துக் கொண்டிருந்தார்கள். நான் அங்கு நடந்து கொண்டிருந்த நிகழ்வுகளை என்னுடைய செல்போனில் படம் பிடித்துக் கொண்டிருந்தேன். பொதுவாக இந்த கோயிலில் செல்போன் காமிரா படம் எடுப்பதற்கு அனுமதி இல்லை. குருஜி சனி பெயர்ச்சி ஹோமம் பலகைகளையும் ராசி பலன்களையும் விவரித்துக் கொண்டிருந்தார். பூர்ணாஹூதி வரும் சமயம் குருஜி அவர்கள் வேதியர்கள் மந்திரம் ஓத நீல பட்டு வேஷ்டி, நீல நிற புஷ்ப மாலை மற்றும் நெய் ஹோம திரவியங்களால் ஹோம குண்டத்தில் பகவானுக்கு சமர்ப்பித்தார். அப்பொழுது எனது போன் காமிராவில் என்னால் படம் எடுக்க முடியவில்லை. போன் ஸ்கீரன் கருப்பாக பிளாங்க்காக இருந்தது. நான் பல முறை முயன்றும் என்னால் படம் எடுக்க முடியவில்லை.


இந்த நிகழ்வை ஒப்பிடும் பொழுது எனக்கு புலப்பட்டது என்னவென்றால் இறைவன் நமக்கு பல ரூபங்களில் காட்சி அளிக்கிறார். இந்நிகழ்ச்சி மூலம் திருநள்ளாரில் நிகழ்ந்ததை போல பலத்த கதிர்கள் மூலம் இங்கும் புலப்பட்டுள்ளார் என்பது புலனாகிறது.

எல்லோரும் சித்தர் அருள்பெற்று மகிழ்ச்சியான வாழ்வு பெற பிரார்த்தனை செய்கிறேன்.

- ரவிசங்கர்

ஸத்குரு துணை

## 18 சித்தர் ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் பாலாலயம் சூட்சமமேடை சிறப்பு





நமது 18 சித்தர் பாலாலயத்தில் அனைவரும் பிரமிக்க வைக்கும் சூட்சமமேடை (குறை தீர்க்கும் மேடை) சிறப்பு பற்றி நான் அறிந்ததை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

நான் ஒரு ஞாயிற்றுக்கிழமை ஆதிசக்திபீடமாகிய பாலாலயம் சென்றேன். எனது மனக்குறைகளை தீர்க்க ஸத்குருவிடம் சூட்சமமேடையில் கைவைத்து மண்டியிட்டு பிரார்த்தனை செய்தேன். அப்பொழுது ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் சூட்சமமேடையில் எனக்கு ஒரு நாகம் படமெடுத்து காட்சியளித்தது. என் மனக்கண்கள் முன்பு இந்த அற்புத காட்சியைக் கண்டேன். வணங்கினேன்.

இந்த காட்சியின் மூலம் நான் அறிந்தது என்னவென்றால் ஸத்குரு என்னை நாகருக்கு பூஜை செய்யுமாறு புலப்படுத்தினார். இதை நமது திருக்கோயிலில் நாகர் பூஜை ஞாயிற்றுக்கிழமை ராகு காலத்தில் திருநாகராஜர் சன்னிதியில் நடக்கும் சமயத்தில் புலப்படுத்தினார்.

குருஜி சர்மா அவர்கள் எங்களை குடும்பத்துடன் வருஷத்துக்கு ஒரு முறை தவறாமல் நாகர் பூஜை செய்யுமாறு 2013ல் சோதிட ஆலோசனையில் ஏற்கனவே கூறியுள்ளார் என்றால் மிகையாகாது. அதை மறுபடியும் தவறாமல் செய்யுமாறு ஸத்குரு வலியுறுத்தியுள்ளார் என்பது தான் நான் அறிந்துகொண்ட உண்மை.

- ரவிசங்கர்

# சுவாமிகளும் வியாபாரிகளும்

திருவண்ணாமலையில் எந்தத் தொழிலாளிகளானாலும், வியாபாரிகளானாலும் சரி, அவர்கள் எல்லோரும் ஒவ்வொரு நாளும் சுவாமியின் வரவை எதிர்பார்த்தபடியே இருப்பார்கள் அதிர்ஷ்ட முள்ளவர்களுக்கு அவர் கிட்டுவார். அப்படி நடந்தால் அன்றைய தினம் அவர்களுக்குத் தொழில் முறையில் எதிர்பாராத அளவுக்கு தனலாபம் கிடைக்கும். எனவே சுவாமியின் வரவை தெய்வத்தின் வரவாகக் கருதி காத்திருப்பார்கள். சுவாமியும் தினந்தோறும் கடைவீதியில் உலாவி வருவது திரும்புவது வழக்கம்.

ஒவ்வொரு வியாபாரியும் சுவாமி வெகுதூரத்தில் வரும்போதே தங்கள் கடையை விட்டுக் கீழே இறங்கிக் கைகட்டி நிற்பார்கள். சுவாமி அருகில் நெருங்க நெருங்க "சுவாமி இங்கே வரலாமே என்றும்" அடியேன் அடிமை என்றும் பலவாறு பணிவோடு கெஞ்சி அழைப் பார்கள். யாருக்கு அதிர்ஷ்டச்சீட்டு விழுமோ தெரியாது விழுந்தால் அன்று அவர்களுக்கு வேட்டை தான் யோகம்தான். சுவாமியோ சித்தன் போக்கு, சிவன் போக்கு ஏதோ ஒரு கடைக்குள் நுழைவார். அங்குள்ள பொருள்களைத் தன் வழக்கம்போல் மேலும் கீழும், கீழும் மேலும் என கலந்து இங்குமங்கும் எடுத்திறைத்து விளையாடுவார். அப்போது கடைக்காரரின் மகிழ்ச்சிக்கு அளவே இராது ஏன் அவர் மகிழ மாட்டார்? பணப்பெட்டி அல்லவா அன்று நிரம்பப் போகிறது!

சுவாமி தொட்டது துலங்கும் என்பது அனைவரும் அறிந்த விஷயம்தானே! இவ்வாறு சுவாமி ஒரு நாளைக்கு இரண்டு மூன்று கடைகளுக்காவது போகாமல் இருக்க மாட்டார். ஒவ்வொரு கடை யிலும், சுவாமியின் படம் மாட்டப்பட்டிருக்கும். அதற்குக் கற்பூரம் காட்டிவிட்டுத்தான் கடையின் வியாபாரம் ஆரம்பிப்பார்கள். இன்றுவரை மட்டுமல்ல இனிமேலும் இப்பழக்கம் நீடிக்கும்.

முத்தியாலு செட்டியார் என்பவரின் கடைக்கு மட்டும் சுவாமி கூப்பிடாமலே செல்வார். அந்தக் கடை அவருக்குச் சொந்தம் போலிருந்தது சுவாமிக்கு அவரிடம் பிரியம்

அதிகம். செட்டியாருக்கு இரண்டு ஜவுளிக்கடை உண்டு. வேலையாட்களும் அதிகம் கற்பூரத்தை மாத்திரம் தன் அருகில் வைத்துக் கொண்டு தன்கையாலே எடுத்துக் கொடுத்து வியாபாரம் செய்வார்.

காலணாவுக்கு (பத்து பைசாவுக்கு) அவரிடம் கற்பூரம் வாங்கினால் அதை பக்கத்துக்கடையில் ஐம்பது காசுக்கு விற்கலாம். இது அருணாசலேஸ்வரர் சன்னதிக்கு போகக்கூடியது என்றெண்ணி அவ்வளவு அதிகமாகக் கொடுப்பார். உள்ளங்காலில் புளியை வைத்து, அதில் ரூபாயைப் பதித்தும் சிறிய வெள்ளிப் பணங்களை கன்னத்தில் அடக்கிக் கொண்டும், அவரிடமிருந்து காசைத் திருடுவார்கள் இந்த வேலை செட்டியாருக்குத் தெரிந்தால் இனி அப்படிச் செய்யாதே" என்று சொல்வாரே ஒழிய வேலையை விட்டு நீக்கமாட்டார் அந்த அளவுக்கு அவர் நல்லவர், கோபப்படாதவர்.

எனவே இவருடைய கடைக்கு சுவாமி அடிக்கடி போய் அரிசி, சர்க்கரை, கற்கண்டு முதலியவற்றை எடுத்து இறைத்து விளையாடு வார். பணப்பெட்டியைத் திறந்து ரூபாய்களையும், நோட்டுகளையும் எடுத்து நாலாபக்கத்திலும் போடுவார். எல்லாவற்றையும் வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டே, செட்டியார் வணங்கி நிற்பார். இவ்வாறு சுவாமியின் திருவருளால் ஏழெட்டு லட்சம் ரூபாய் அவருக்குச்சேர்ந்துவிட்டது.

ஒருநாள் சுவாமி அவர் கடையிலிருந்து நிறைந்த நெய் டின் ஒன்றை எடுத்து தண்ணீர் தெளிப்பது போல் மொத்தமாய் அதைத் தெருவில் சாய்த்துவிட்டார். மறுநாள் செட்டியாருக்குக் கடன்காரன் மோசம் செய்ததால் கைவிட்டுப் போய்விட்டது என்று நம்பிய பெருந்தொகை எதிர்பாராமல் திரும்பி வந்துவிட்டது.

மற்றொரு சமயத்தில் அவருடைய ஜவுளிக் கடையிலிருந்து சுவாமி ஒரு விலையுயர்ந்த துப்பட்டாவை எடுத்து அதைக் கிழித்துக் கிழித்து சுமார் நூறு துண்டுகளாகச் செய்தார். எச்சம்மாள் என்பவரின் வீட்டில் உள்ள எருமைக் கன்றின் கொம்புகளிலும் கழுத்திலும், வாலிலும், காலிலும் என ஒவ்வொன்றாகக் கட்டிவிட்டார். அன்றைய தினமே செட்டியாருக்கு இரண்டு லட்சம் லாபம் கிடைத்தது.

வியாபாரிகளுக்கெல்லாம் பெரிய ஒரு வர பிரசாதாம் சுவாமிகளின் தங்க கை. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளை முழுமையாக நம்பி சரணடைந்தால் அவர் நம்மை எல்லா கஷ்டங்களிலிருந்தும் காப்பாற்றி சகலவித ஐஸ்வர்யங்களையும் கொடுப்பார் என்பது நிதர்சனமாகிறது.

## குரு கீதை

சோஷணம் பவஸிந்தோச்சதீபனம் சஷரஸம்பதாம்,
குரோ: பா தோதகம் யஸ்ய தஸ்மை ஸ்ரீ குரவே நம:

பொருள் : பிறவிக்கடலை வற்ற செய்வதும், அழியும் ஸம்பத்தைப் பொசுக்குவதும் எந்த குருவினுடைய பாத தீர்த்தமோ அந்த குருவிற்கு நமஸ்காரம்.


சிவே ருஷ்டே குருஸ்த்ராதா குரௌ ருஷ்டே ந கச்சன।
லப்த்வா குலகுரும் ஸம்யக் குருமேவ ஸமாச்ரயேத்।

பொருள் : சிவனுடைய கோபத்திற்குப் பாத்திரமானால் குரு காப்பாற்றுவார்; ஆனால் குருவின் கோபத்திற்குப் பாத்திரமானால் எவரும் காப்பாற்ற இயலாது. குல குருவை அடைந்து சிறந்த குருவை ஆசிரயிக்க வேண்டும்.

ஸப்தஸாகர பர்யந்தம் தீர்த்த ஸ்நானபலம் யதா
குருபாதோதக பிந்தோ: ஸஹஸ்ராம் சேன தத்பலம்

பொருள் : ஏழு கடல்கள் வரை உள்ள தீர்த்தங்களில் ஸ்நானம் செய்த பலன் எதுவோ அது குருவின் பாத தீர்த்தத்தின் ஒரு துளியின் ஆயிரத்தில் ஒரு பங்கினால் ஏற்படும்.

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்



அன்பார்ந்த
சேஷ ஒளி வாசகர்களே

மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியைப் படித்து விட்டீர்களா? உங் களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடை வோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் பலரும் அறியும் வண்ணம், சேஷ ஒளியிலும் வெளி யிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி :
பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை 600 004.
தொலைபேசி : 04424938734, 24953793, 9445232505

## டிரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ், ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த டாலர், பேனாக்கள் மற்றும் சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம்
(தமிழ், ஆங்கிலம்)
5. **The Glory of Sakthi Peetam**
6. ஸ்ரீ கிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
7. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
8. ஸ்ரீ சக்ர மஹாமேரு ஸத்குரு பதினெண் சித்தர்
சக்திபீடம் (அபூர்வ படம்)
9. ஸ்ரீ சக்ர மஹாமேரு அம்பிகை பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
10. ஸத்குருவும் சக்தி பீடத்தின் மஹிமையும்

## குருவருள்

இந்த நவீன பறக்கும் யுகத்தில் மனித வாழ்க்கை என்பது இயந்திர கதியாக மாறி நம் கட்டுக்குள் இல்லாமல் நம்மை திணறச் செய்து கொண்டிருப்பதை, ஒவ்வொரு நாளும் நாம் காண்கின்றோம்.



இப்பிரச்சனைகளை தீர்ப்பதற்கு இறை பக்தி. ஒப்பற்ற திறவுகோலாக இருந்தாலும், குருபக்தியும், குருவருளும் அந்த உன்னத உணர்விற்கு, ஒரு மிகச்சிறந்தத் தனித்தன்மை வகிக்கின்றது. வாழ்க்கை பாதையிலுள்ள மேடு பள்ளங்களை கடந்து, நாம் சேர வேண்டிய இலக்கையும், இலட்சியத்தையும் நம்மை அறியாமலேயே எளிதில் கொண்டு போய் சேர்த்து விடுகிறது. உண்மையில், நாம் கடந்து வந்த பாதையை சிறிது நேரம் திரும்பிப் பார்த்தோமேயானால், இது எத்தகு சாத்தியம் என்று நாமே வியப்பில் ஆழ்ந்து போவோம்.

ஒரு தாயின் இடுப்பில் இருக்கும் பொழுது, குழந்தையானது, எந்த அளவிற்கு நிம்மதியாக இருக்குமோ, அதுபோல நாமும், இனி நம் கவலைகளையும், பிரச்சனைகளையும், நம் உலக மகா ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளிடம் முறையிட்டு விட்டு, உண்மையான சமர்ப்பணத்துடன் அவருக்கு சேவைகள் செய்து, நம் பணிகளை பணிவுடன் தொடருவோம். அப்படி செய்யும் பொழுது, அது சிறிய பணியானாலும் அல்லது நம்மை பயமுறுத்தும் பிரச்சனையானாலும், வெகு எளிதாக தீர்க்கப்படும் காரணம், அச்செயலை நமக்கு முன்னின்று, நம் சார்பாக குருநாதர் அதை நிறைவேற்றிக் கொடுக்கின்றார். இருப்பினும், இந்த அற்புதம் நிகழ, நமக்குள் தோன்ற வேண்டியது 'சரணாகதி' என்ற நிகரற்ற உணர்வேயாகும்.

ஆகையால் அச்சரணாகதி நிலையில் நின்று, நம் வாழ்வை ஸத்குருவுடன் தொடருவோமேயானால், இயலாத கார்யம் என ஒன்று இவ்வுலகில் இருக்க சாத்தியமே இல்லை. சத்தியமே வடிவான நம் ஸத்குருவே சரணம் என்று அவர் பாதம் பற்றினால், பார் புகழும் பெருவாழ்வு நமக்கும் நம் சந்ததிகளுக்கு நிகழும் என்பது நிச்சயம்.

- உமாபரணி

## கோ சாலை



பதினெண் சித்தர் சக்தி பீடத்திலுள்ள கோமாதாக்களில் ஒன்றை தத்தெடுத்து கோதானம் செய்யலாம்.

விபரங்களுக்கு :
**044- 24938734**

**கோமாதாவை பராமரிக்க நிதிதனை அள்ளித் தாருங்கள்.**


## ஸ்ரீ சேஷ ஒளி

திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
குருஜி கே.வி.எல்.என். சர்மா

வெளியீட்டாளர்
திரு. கே. ராமசுப்ரமணியன்

உதவி ஆசிரியர்
திருமதி. என். ஜானகி

கௌரவ ஆசிரியர்கள்
திரு. மருதபரணி
திருமதி. உமாபரணி

அலுவலக உதவியாளர்
திருமதி. பி. லக்ஷ்மி

வடிவமைப்பு
திருமதி. பிரேமா

பதிவு அலுவலகம்
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
போன் : 04424938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email: guruji@seshadri.info


## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

**பால் விநியோகம் :** பிரதி ஞாயிறு தோறும் சக்திபீட பாலாலயத்தில் குழந்தைகளுக்கு பால் விநியோகம் நடைபெறுகிறது. இந்த அரிய கைங்கர்யத்தில் கலந்து கொள்ள விரும்பும் அன்பர்கள் ரூ. 500 செலுத்தி தாங்களே நேரில் வந்து கொடுக்கலாம்.

**இதனால் ஏற்படும் பலன்கள் :**

குழந்தைகள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள்.

தேர்வு சமயத்தில் ஏற்படும் வீண் பயம் நீங்கி மனத் தெளிவு ஏற்படும்.

தீராத வியாதிகள் தீரும். சித்தர்கள் அருள் கிடைக்கும்.

இலவச பால் விநியோகத்திற்கு நன்கொடை அளித்து ஸ்ரீ கிருஷ்ணனின் அருளையும் மகானின் அருளையும் சித்தர்களின் அருளையும் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நித்திய அன்னதானம் :** சக்தி பீடத்தில் நித்திய அன்னதானம் வழங்கப்படுகிறது. சாதாரண அன்னதானம் ரூ. 2000 வடை பாயசத்துடன் சிறப்பு அன்னதானம் ரூ. 2500 நன்கொடைகளுக்கு வருமான வரிவிலக்கு 80G உண்டு.

தானத்தில் சிறந்தது அன்னதானம்
அன்னதானம் செய்வோம்
ஆனந்தம் அடைவோம்

சக்தி பீடத்தின் சுற்றுசுவர்
திருப்பணிக்கு நன்கொடைகள்
தாராளமாய் தரும்படி
கேட்டுக் கொள்கிறோம்.

# சக்தி பீடத்தில் நடந்து முடிந்த விழாக்கள்



அக்டோபர் மாதம் 29ம் தேதி கந்த சஷ்டியை முன்னிட்டு முருகனுக்கு திரிசதி அருச்சனை மிக விமரிசையாக நடைபெற்றது.





டிசம்பர் மாதம் 5, 6 கார்த்திகை தீபம் மிக சிறப்பாக நடைபெற்றது. சக்திபீடம் முழுவதும் தீபங்கள் ஏற்றி வைத்து அலங்கரித்திருந்தனர். அந்த காட்சி மிகவும் அற்புதமாய் இருந்தது. அன்று பௌர்ணமி தினமாதலால் குருஜி அவர்கள் மிக சிறப்பாக நவாவரண பூஜை செய்து வந்திருந்த பக்தர்கள் அனைவருக்கும் அருட்பிரசாதம் வழங்கினார்.





ஜனவரி மாதம் 16ம் தேதி சனிப்பெயர்ச்சி விழா மிகச் சிறப்பாக சக்தி பீடத்தில் ஸ்ரீ சனீஸ்வர சாந்தி ஹோமத்துடன் நடைபெற்றது. பரிகாரம் செய்து கொள்ள வேண்டிய ராசிக்காரர்கள் குருஜி அவர்களிடம் ஆலோசனை பெற்று ஹோமத்தில் கலந்து கொண்டு பரிகாரம் செய்து பலன் அடைந்தார்கள். அதன்பின் குருஜி சர்மா அவர்கள் 12 ராசிகளுக்கும் சனிப்பெயர்ச்சி பலன்களை கூறினார்.

டிசம்பர் மாதம் 21ம் தேதி ஸ்ரீஹனுமந்த ஜெயந்தி விழா நடைபெற்றது. அன்று பக்த ஆஞ்சநேயருக்கு சிறப்பு வழிபாடும், வடைமாலை, சந்தனக்காப்பும் நடைபெற்றது.

Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Icon Graphics, Chennai-5.